**தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள், சென்னை.6**

ந.க.எண். 1554/அ1/சுற்றறிக்கை/2015–1, நாள். 10.07.2015.

------

பொருள். மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்கக்ம் – பள்ளிகளுக்கு தற்காலிக அங்கீகாரம்/புதிய பள்ளி துவக்க அனுமதி/மேல்நிலைப் பள்ளியாக தரம் உயத்தல்/கூடுதல் வகுப்புகள் துவக்க அனுமதி கோரும் கருத்துருக்கள் – ஆய்வறிக்கை முழுமையாக பூர்த்தி செய்து அனுப்ப அறிவுறுத்தல் – சார்பாக.

பார்வை. இவ்வலுவலகத்தில் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் /மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகள் சார்பாக பெறப்படும் கருத்துருக்கள்.

-------

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் /மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகள் சார்பாக தற்காலிக அங்கீகாரம்/புதியப் பள்ளி துவக்க அனுமதி/மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தல்/கூடுதல் வகுப்புகள் துவக்க அனுமதி கோரும் கருத்துருக்களுடன் பெறப்படும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளரின் ஆய்வறிக்கை படிவத்தை ஆய்வு செய்யும்பொழுது அனைத்துக் கலங்களும் பூர்த்தி செய்யப்படாமலும், அளிக்கப்படும் விவரங்கள் முழுமையாகவும் தெளிவாகவும் குறிப்பிடாமல் இவ்வலுவலகத்தில் பெறப்படுகின்றது.

அவ்வாறான கருத்துருக்கள் பெறப்பட்டு பரிசீலிக்கும் போது போதிய விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாததால் கூடுதல் விபரங்கள் கோரும் நிலை எற்பட்டு ஆணை வழங்குவதில் கால தாமதம் ஏற்படுகின்றது. எனவே பள்ளிகளிலிருந்து பெறப்படும் கருத்துருக்கன் மீதான ஆய்வறிக்கை விவரங்களுடன் தெளிவாக அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

- தொடக்க அனுமதி / அங்கீகாரம் வேண்டி பெறப்படும் விண்ணப்பங்கள் அலுவலகத்தில் முறையாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.
- விண்ணப்பம் தொடர்பான பள்ளி மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளரால் கள ஆய்வு செய்ய விண்ணப்பங்களின் முன்னுரிமையினை தவறாது கடைபிடிக்க வேண்டும்.
- விண்ணப்பக் கட்டணம் செலுத்தியதை சரிபார்க்க வேண்டும்.

- களஆய்வின்போது விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் அசல் ஆவணங்களுடன் ஒப்பிட்டு ஒவ்வொரு ஆவணத்திலும் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது என சான்றளிக்க வேண்டும்.
- புகைப்படம் ஒவ்வொன்றிலும் என்னால் நேரடியாக பார்வையிடப்பட்டது என மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளரால் சான்றளிக்கப்பட வேண்டும்.
- ஏற்பளிக்கப்பட்ட பள்ளிக் கட்டட வரைபடத்தில் உள்ள சர்வே எண், உறுதிச் சான்று, உரிமச் சான்று, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தடையின்மைச் சான்று, சுகாதாரச் சான்று ஆகியவற்றில் உள்ள சர்வே எண், பள்ளி முகவரி ஆகியன இதர ஆவணங்களுடன் ஒப்பிட்டு ஒத்த வகையாக உள்ளதா? என்பதை சரிபார்க்க வேண்டும்.
- உறுதிச் சான்று மற்றும் உரிமச் சான்றுகள் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் எண்ணிக்கைக்கு குறையாமல் தகுதிப்பாடு அளித்திருக்க வேண்டும்.
- ஆசிரியர்களின் பொதுக் கல்வித் தகுதி, பி.எட். பயிற்சி, ஆசிரியர்களின் தகுதித் தேர்வு சான்று ஆகிய சான்றுகளை ஆய்வு செய்ய வேண்டும்.
- மாணவ/மாணவியருக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு போக்குவரத்துத்துறையிடம் முறையாக தகுதிச் சான்று பெறப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். (G.O.(Ms).No.727, Home (Tr.VII) Department, dated 30.09.2012.)
- வாகன ஓட்டுநர்களின் ஓட்டுநர் உரிமங்களை ஆய்வு செய்ய வேண்டும்.
- கட்டிடத்தின் ஒவ்வொரு தளத்திலும் தீ தடுப்பு கருவிகள் போதிய அளவில் பொருத்தப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.
- பள்ளி வளாகத்தில் உறுதிச் சான்று பெறப்படாத கட்டடங்கள் உள்ளதா என்பதை ஆய்வு செய்து குறிப்பு அளிக்க வேண்டும்.
- கழிப்பறைகள், சிறுநீர் கழிப்பறைகள் முறையாக கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யப்படுவதை அன்னையர் குழு மூலம் கண்காணிக்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

- பள்ளியில் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை, தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம், 2006, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 ஆகியன நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.
- அறிவியல் செயல்முறைப் பயிற்சிகள் திட்டமிட்டபடி வழங்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.
- நூலகம் முறையாக பயன்பாட்டில் உள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.
- கழிவறைகள், சிறுநீர் கழிப்பறைகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் குழாய்கள், கை கழுவும் குழாய்கள் ஆகியன மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.
- கல்வி சார் நடவடிக்கைகள் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகள் ஆகியன முறையாக மேற்கொள்ளப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.
- அங்கீகாரம் கோரும் காலத்திற்கு ஆய்வு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- மாணவ/மாணவியர் எண்ணிக்கைக்கு ஏற்ப நிர்வாகப் பங்குத் தொகை செலுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

மேற்கண்டவாறு விண்ணப்பத்தில் உள்ள அனைத்து இனங்களையும் சரிபார்த்து ஆய்வு செய்து நிர்ணயிக்கப்பட்ட ஆய்வறிக்கையில் எந்தவொரு கலமும் விடுபடாமல் பூர்த்தி செய்து தனது பரிந்துரையுடன் விண்ணப்பப் படிவத்துடன் ஆய்வறிக்கையினை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும் என அனைத்து மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர்.

பெறுநர்.
அனைத்து மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர்கள்.
நகல். இவ்வலுவலக காணிப்பாளர்கள்
மற்றும் பிரிவு பணியாளர்கள்.